**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.70 /2022**

**Deposition of P.W.** 3

Name : கலா

S/o, D/o, W/o : செல்லன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 04.06.2025**

Accused Present.

**முதல் விசாரணை–**

நான் குலசேகரத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் 2ஐ தெரியும். ஆஜர் எதிரியையும் தெரியும். அ.சா.1ற்கும், ஆஜர் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

அ.சா.1–ற்கும், எதிரிக்கும் அ.சா.1 காதலிக்கும் பெண்ணை பற்றி தவறாக பேசியது குறித்து ஏற்பட்ட முன்விரோதத்தில் 22.10.2021ம் தேதி இரவு 09.00 மணிக்கு இளமான்கோட்டுவிளை பஞ்சாயத்து கிணறு அருகே எதிரி அ.சா.1ஐ அசீங்கமாக பேசி காற்றாடி கம்பால் வயிற்றில் அடித்து கொலை செய்ய முயற்சி செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரி தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.70 /2022**

**Deposition of P.W.** 4

Name : தாசன்

S/o, D/o, W/o : ரபேல்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 04.06.2025**

Accused Present.

**முதல் விசாரணை–**

நான் செருப்பாலூரில் வசித்து வருகிறேன். கூலிவேலை செய்து வருகிறேன்.என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்றுடைது அல்ல போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் பார்வை மகஜரில் உள்ள தாசன் என்ற கையொப்பமும், அழைப்பாணையில் உள்ள கையொப்பமும் ஒன்று போல் உள்ளது என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யும் போது உடன் இருந்து கைபெயாப்பம் செய்து விட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரி தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.70 /2022**

**Deposition of P.W.** 5

Name : ராஜையன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 04.06.2025**

Accused Present.

**முதல் விசாரணை–**

நான் இட்டகவேலியில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன்.என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கைரேகை என்னுடையது தான். நான் சந்தைக்கு சென்று விட்டு வரும் போது ஈஞ்சவிளையில் போலீசார் இருந்தார்கள். போலீசார் அங்கு வந்ததற்காக சாட்சி கையொப்பம் கேட்டார்கள். கைரகை வைத்து கொடுத்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் கைரேகை செய்யும் போது மாலை 04.00 மணி இருக்கும். கையெழுத்து போட தெரியாது. போலீசார் வந்ததற்காக எழுதப்படாத வெள்ளை தாளில் கையொப்பம் கேட்டார்கள். போலீசார் என்னை விசாரித்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.